1994 ஜனவரி 3]

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோக்கவாடியில் மட்டுமல்ல, சமயபுரம், நாகமலை புதுக்கோட்டை ஆகிய இடங்களிலேயும் வேப்பங்கொட்டையிலிருந்து வேப்ப எண்ணெய் எடுக்கும் ஆலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான எண்ணெய் சமயபுரத்தில் எடுக்கப்பட்டு தமிழகத்தில் மற்ற சோப்பு தயாரிக்கும் இடங்களுக்கு வேப்ப எண்ணெய்யானது விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, தோக்கவாடியிலே போதிய வசதி இல்லாத காரணத்தினால் இந்த சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோக்கவாடி கிராமம் முழுக்க முழுக்க ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் பகுதி. அங்கே இடம் அதிக அளவில் இருக்கிறது. எனவே, ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஒரு வாய்ப்பு இருப்பதால் மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, தோக்கவாடியில் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலையைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் மீண்டும் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் *11.05*

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோப்பு தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களை உலர வைப்பதற்கும் பதப்படுத்துவதற்கும் தேவையான இடவசதி, காதி கதர் வாரியத்திற்குச் சொந்தமான கட்டிட வசதி போன்றவை தோக்கவாடியில் தற்போது இல்லை. தேவையைக் கருதி வரும் ஆண்டுகளில் அது பரிசீலிக்கப்படும்.

125–

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிகளுக்குப் பாதுகாப்பு

20506*–திரு. உ. பலராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

விடை—

போக்குவரத்துக் கழகங்களில் விபத்தின்றி பேருந்துகளை இயக்குவதற்கு ஓட்டுனர்களுக்குப் பயிற்சியளித்தல், ஓட்டுனரின் கண்பார்வையை வருடம் ஒருமுறை மருத்துவர் மூலம் பரிசோதனை செய்தல், அடிக்கடி விபத்து நிகழும் இடங்களில் வேகத்தடை பொருத்துதல், கவனக்குறைவாக செலுத்தும் ஓட்டுனர் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், தீப்பற்றக்கூடிய பொருட்கள், வெடிமருந்துகள், வெடிமருந்துப்பொருட்கள் போன்றவற்றிற்கு அனுமதி மறுத்தல், மோட்டார் வாகனச் சட்ட விதிமுறைகளை கடுமையாகப் பின்பற்றுமாறு ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கு அறிவுறுத்துதல், சந்தேகத்திற்குரிய நபர்களை பயணம் செய்ய அனுமதிக்காமை, போக்குவரத்துக் கழகக் காவலாளர்கள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்டு மெட்டல் டிடெக்டர் மூலம் பேருந்துகளில் திடீர் சோதனை, கழகப் பாதுகாவலர்களைக் கொண்டு இரவுநேரங்களில் வயர்லெஸ் பொருத்தப்பட்ட வாகனங்களில் இரவு ரோந்துப்பணி செய்தல், ஒளிப்பான் முறையும் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

126–

ஆரணியாற்றிலிருந்து கொடுதலையாற்றுக்கு நீரைத் திருப்பிவிடும் திட்டம்

*16297–திரு. ப. **ரங்கநாதன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியாற்றிலிருந்து கொடுதலையாற்றுக்கு நீரைத் திருப்பி விடுவதற்கான பணி முடிந்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆரணியாற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட அணைக்கட்டுப் பணி, முழுமையாக முடிக்கப்பட்டு, கடந்த 1992ஆம் வருட, வடகிழக்குப் பருவ மழையின்போது, ஆரணியாற்றின் உபரி நீர் கிருஷ்ணா குடிநீர்த் திட்டக் கால்வாய் மூலம் திருப்பிவிடப்பட்டது.